**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**S.C. No:43 /2021**

**Dated: 10.02.2026**

**Deposition of Witnesses for PW -7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.ராஜேந்திரன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சம்பட்டி விடுதி நால்ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் ஒட்டல் கடை நடத்தி வருகிறேன். கடந்த 2020 ம் வருடம் 15.10 மணியளவில் நான் வாராப்பூரில் இருந்து நால்ரோட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அங்கு கீழப்பட்டி அரசு தொடக்கப்பள்ளி அருகே போலீஸார் நின்று கொண்டிருந்தார்கள். நான் இறங்கி என்னவென்று விசாரித்தேன். பழனிவேல் என்பவரை போலீஸார் விசாரித்து கொண்டிருந்தார்கள். போலீஸார் விசாரணையில் பழனிவேல் தான் அடித்ததை ஒப்புக்கொண்டார்.

பழனியாண்டி சொல்ல சொல்ல அவருடைய வாக்குமூலத்தை அங்கேயே டைப் அடித்தார்கள். அதன்பின்பு அவர் வைத்திருந்த அலக்கை எடுத்து ஒப்படைத்தார். அதற்கு சாட்சியாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்துள்ளேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது 1 வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் காண்பிக்கப்பட்டுள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அதை எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்றால் அலக்கை ஒப்படைத்ததற்காக கொடுத்தற்காக போட்டு கொடுத்தேன். ஆகவே கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு மதியம் 2.15 மணிக்கு நான் சென்றதாக வாக்குமூலத்தில் சொன்னால் அது சரியல்ல. நான் காவல் நியைத்திற்கு இந்த வழக்கு சம்பந்தமாக செல்லவில்லை. டைப் அடித்தது எங்கு என்றால் கீழப்பட்டி அரசு பள்ளி கூடத்தில் வைத்து டைப் அடிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னுடன் சாட்சியாக ஒப்புதல் வாக்குமூலம் மகஜரில் கையெழுத்து போட வேறு யாரும் வரவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 தமிழ்செல்வன் என்னுடன் இன்று கோர்ட் க்கு வந்துள்ளார்

என்றால் சரிதான். அவர் எனது பங்காளி என்றால் சரிதான். பழனிவேலுடன் எவ்வளவு வருடங்களாக பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனக்கும் பழனிவேலுக்கும் பேச்சு வார்த்தை இல்லாமல் போனதற்கு காரணம் ஒன்றும் இல்லை, சாமி சிலை காரணமாக தான் விரோதம் என்றால் சரியல்ல. சின்னையா அடிபட்ட அன்று எதிரியை விசாரணைக்காக போலீஸார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் ்சொன்ன இடத்தில் எதிரியை போலீஸார் விசாரிக்கவில்லை என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் எதிரி அலக்கை ஒப்படைக்கவில்லை என்றும் எதிரி மீது உள்ள விரோதம் காரணமாக அ.சா.1 தமிழ்செல்வன் துாண்டுதலின் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.